
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 4, 2022

வியாழக்கிழமை ஓகஸ்ட் 04, 2022 | ஒளி: 06 கதிர் 067 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை, நவம்பர் 27ஆம் திகதி நடத்தப்படும். உயர்தரப் பரீட்சைகள் நவம்பர் 28ஆம் திகதி நடத்தப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### சர்வகட்சி அரசாங்கத்துக்கு

# வாருங்கள் வந்து சேருங்கள்

- ரணில் அழைப்பு: எதிராளிகள் இல்லை என்கிறார்
- தமிழர்களுக்கான அரசியல் தீர்வு அவசியம்
- சகலரின் உரிமைகளையும் பாதுகாப்பேன்
- நாட்டை மீட்டெடுக்க ஒத்துழைப்பு அவசியம்
- இந்தியா வழங்கிய உயிர் மூச்சுக்கு நன்றி
- ஐ.எம்.எப்புடன் 4வருட வேலைத்திட்டம்
- சகலரும் எமது நண்பர்கள். எமக்கு எதிராளிகள் இல்லை
- பெண்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்
- ஜனாதிபதி முறைமை தேவையா இல்லையா? ஆராய்வோம்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை, நேற்று (3) ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முழுச் செய்தி P3

## ஜனாதிபதி ஒருவரால் ஆற்றப்பட்ட சிறந்த உரை

### ரணிலுக்கு சு.கா புகழாரம்



பா.நிரோஸ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடன உரை, நீண்ட காலத்துக்குப் பின்னர் ஜனாதிபதி ஒருவரால் ஆற்றப்பட்ட சிறந்த உரை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஆசனத்தில் அமர்ந்தவரும் பியர் கிளாஸ் எடுத்தவரும்

அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னெடுத்த போராட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2



### அதிக பணவீக்கம் கொண்ட நாடுகளில்

## இலங்கைக்கு ஆறாமிடம்

### உலக வங்கி தெரிவிப்பு

மிக மோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக பணவீக்கத்தையும், உணவு தட்டுப்பாட்டையும் எதிர்கொள்ளும் முதல் பத்து நாடுகளின் பட்டியலை உலக வங்கி வெளியிட்டுள்ளது. இந்த பத்து நாடுகளில் இலங்கை ஆறாவது இடத்தை வகிப்பதாகவும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2


## தேசிய அரசாங்கம் குறித்து சிந்திப்போம்

### ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு

தற்போதைய நெருக்கடி நிலைமைகளை கையாளும் தேசிய வேலைத்திட்டத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கும், ஆனால் தேசிய அரசாங்கம் அல்லது சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து பின்னர் சிந்திக்க முடியுமென ஜனாதிபதியுடனான சந்திப்பில் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் உள்ளிட்ட அடையாளம்

தொடர்ச்சி P2

## மஹிந்த,பசிலுக்கு பயணத்தடை நீடிப்பு



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடையை எதிர்வரும் 11ஆம் திகதி வரை நீடிப்பதாக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தொடர்ச்சி P2



## 9 மாவட்டங்களில் 12,289 பேர் நிர்க்கதி

நாட்டில் ஏற்பட்டிருக்கும் சீரற்ற வானிலை காரணமாக ஒன்பது மாவட்டங்களில் 3,037 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 289 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரையிலும் 3 பேர் மரணமடைந்துள்ளனர். நால்வர் காணாமல் போயுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## எரிபொருள் வரிசையில் மற்றுமொரு மரணம்

எரிபொருள் வரிசையில் காத்திருந்த மற்றுமொருவர் நேற்று (03) அதிகாலை உயிரிழந்துள்ளார். புத்தளம் நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2



## ரணிலின் ஜனநாயகம் நஞ்சு கலந்த கேக்

பா.நிரோஸ்

இதற்கு முன்னர் பேசப்பட்ட விடயங்களையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கைப் பிரகடன உரையில் பேசியிருப்பதாகத் தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஜனநாயகம் என்கிற பெயரில் நஞ்சு கலந்த கேக்கை நாட்டு மக்களுக்கு ரணில் வழங்கப்பார்க்கிறார் என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ரணிலின் அழைப்பை ஏற்றார் சஜித்



19ஆவது திருத்தச் சட்டம், பாராளுமன்ற குழு முறைமை ஆகியவற்றை மீள செயற்படுத்துதல் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்திருந்த அழைப்பை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக்கொண்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

தொடர்ச்சி P2



### கொள்கைப் பிரகடனத்தின் மீது

## மூன்று நாட்கள் ஒத்திவைப்பு விவாதம்

- 2022 பட்ஜெட்டுக்கான திருத்தச் சட்டமூலம் 09ஆம் திகதி
- 22வது திருத்தச் சட்டமூலம் 10ஆம் திகதி

ஜனாதிபதி நேற்று (03) பாராளுமன்றத்தில் முன்வைத்த அரசாங்கத்தின் கொள்கைப் பிரடகனம் தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை எதிர்வரும் 09, 10 மற்றும் 12ஆம் திகதிகளில் நடத்துவதற்கு நேற்று (03) பாராளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சர்வகட்சி அரசாங்கத்தில் பலரும் இணையும் சாத்தியம்

பா.நிரோஸ்

நாட்டின் பொருளாதார நெருக்கடியை சமாளித்து குறுகிய காலத்துக்குள் நாட்டை மீட்டெடுக்கும் பொதுவான வேலைத்திட்டமொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கும் பட்சத்தில் அவருடன் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைத்து செயற்படலாம் என பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர். எனினும், எதிர்க்கட்சி தலைவர் சஜித் தரப்பினரும், சுயாதீன பாராளுமன்ற குழுவினரும் இந்த வேலைத்திட்டங்களை பாராளுமன்ற தெரிவுக்குழுவின் மூலமாக கையாள வேண்டுமெனன வலியுறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

### சர்வகட்சி அரசாங்கத்தில்

## இ.தொ.காவுக்கு அமைச்சுப் பதவி

பா.நிரோஸ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் உருவாகும் சர்வகட்சி அரசாங்கத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இணைந்துகொள்ளும் என தெரிவிக்கும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், சர்வகட்சி அரசாங்கத்தில் இ.தொ.கா அமைச்சுப் பதவி கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இ.தொ.காவின் தலைவர், பொதுச்செயலாளர் உள்ளிட்ட அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சந்தித்து, சர்வக்கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவை தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் தமிழ்மிரருக்குக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன்,

தொடர்ச்சி P2

### 6,689,985 அமெரிக்க டொலர் மதிப்பிலான

## மருந்துப் பொருட்களை வழங்கியது அமெரிக்கா

அமெரிக்காவின் புகழ்பெற்ற உலகளாவிய மனிதாபிமான அமைப்பான "ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நேஷனல் ", இலங்கை மக்களுக்கு 6,689,985 அமெரிக்க டொலர் ( 2,475,294,450 ரூபா) மதிப்பிலான அவசர மருத்துவப் பொருட்களை வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன், இந்த மருந்துத் தொகுதிகள் அனுப்பப்படும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இலங்கைக்கு ஆறாமிடம்

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானத்தை பெரும் நாடுகள் மிக மோசமான பணவீக்கத்தை எதிர்கொண்டு வருவதாகவும், இதில் சமீபத்திய உணவுப் பொருட்களின் விலை உயர்வு, மற்றும் பணவீக்கம் அதிகம் உள்ள 10 நாடுகளில் முறையே லெபனான், சிம்பாப்வே, வெனிசுவேலா, துருக்கி, ஈரான், இலங்கை,ஆஜன்டீனா, சுரினாம், எத்தியோப்பியா மற்றும் மொல்ட்டோவா ஆகிய நாடுகள் முதல் பத்து இடங்களில் உள்ளதாக உலக வங்கி சுட்டிக்காட்டுயுள்ளது.

# ஜனாதிபதி ரணிலின் அழைப்பை...

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டு மக்களின் வாழ்வை இயல்பு நிலைக்கு மீள கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சஜித் பிரேமதாஸ அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

19ஆவது திருத்தச் சட்டத்தை மீளக் கொண்டுவருதல், பாராளுமன்றத்தில் குழு முறைமை மீள கொண்டுவருதல் உள்ளிட்ட எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விடுக்கப்பட்ட அழைப்பை ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

# இ.தொ.காவுக்கு அமைச்சுப் பதவி

ஜனாதிபதியுடனான சந்திப்பில் மலையக மக்களின் பிரச்சிணைகள் தொடர்பில் கலந்துரையாடினோம். குறிப்பாக மலையக மக்களின் பொருளாதார நிலைமை, தொழில் வாய்ப்புகள், பிரதேச செயலக அதிகரிப்பு விடயங்கள் தொடர்பில் ந்துரையாடியிருக்கிறோம்.

மலையகத்தில் உள்ள சமூர்த்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் நாம் கோரிக்கை விடுத்துள்ளதோம் என்றார்.

இதேவேளை, ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துக்கொள்ள வேண்டும் என்கிற எந்தவிதமான கோரிக்கைகளையும் ஜனாதிபதி எம்மிடம் முன்வைக்கவில்லை. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தில் இருந்தபோதும் நாம் அக்கட்சியின் உறுப்புரிமையை ஏற்கவில்லை எனவும் தெரிவித்தார்.

# தேசிய அரசாங்கம் குறித்து சிந்திப்போம்

காணப்பட்ட பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று (3) சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. இதன்போது ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள விடயங்களை கூட்டமைப்பு வரவேற்பதாகவும், நீண்டகால அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத்தர வேண்டும் எனவும் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து 2015-2019 காலப்பகுதியில் சில முன்னகர்வுகள் எடுக்கப்பட்ட நிலையில் அதனை முழுமைப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிப்பு, மகாவலி வலயத்தில் நில அபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடத்தில் வலியுறுத்தியுள்ளனர். இவை குறித்து கூடிய கவனம் எடுப்பதாகவும் ரணில் தெரிவித்துள்ளார் என கூட்டமைப்பு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ரணிலின்...

இளைஞர்களின் வாழ்க்கை, நாட்டின் அமைதி நிலைமை, இலஞ்ச ஊழல் தொடர்பில் ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையில் குறிப்பிட்டிருக்கிறார். இவற்றை தவிர வேறெதுவும் ரணிலின் உரையில் இல்லை. இந்த விடயங்களில் ஒன்றும் புதிதாக இல்லை. இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகள், வரவு -செலவு திட்ட உரைகளிலும் இதற்கு முன்னர் பேசப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்துக்கு இளைஞர்கள் வர வேண்டுமென பேசினாலும், 70, 80 வயதைக் கடந்த வயதானவர்களே பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். 45 வருட ரணிலின் அரசியல் வரலாற்றில் 6 தடவைகள் பிரதமராகவும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும், எதிர்க்கட்சி

தலைவராகவும் ரணில் இருந்திருக்கிறார். எனவே, நாட்டின் தற்போதைய நிலைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களில் ரணிலும் பிரதான நபரே. ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றியிருக்கும் உரையாகவே நாம் இதனைப் பார்க்கிறோம் என்றார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் பேசும் ஜனாதிபதி, சர்வகட்சி அரசாங்கத்துக்கான காலவரையறையை கூறவில்லை. பாராளுமன்றத்தை இன்னும் மூன்று வருடங்களுக்கு கொண்டு செல்ல முடியும். எனவே, அடுத்த மூன்று வருடங்களுக்கு ஜனாதிபதியாக இந்த பாராளுமன்றத்தைக் கொண்டு செல்லப்பார்க்கிறார். இது ஜனநாயக விரோத செயற்பாடு. எனவே ரணில் - ராஜபக்ஷவின் சர்வகட்சி அரசாங்கத்தில் இணையப்போவதில்லை என்றார்.

# மஹிந்த,பசிலுக்கு பயணத்தடை நீடிப்பு

இந்த பயணத்தடை ஏற்கெனவே இன்று (4) வரையில் நீடிக்கப்பட்டிருந்த நிலையில், உயர்நீதிமன்றம் மேற்கண்டவாறு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

# எரிபொருள் வரிசையில் மற்றுமொரு மரணம்

புத்தளம் - மணற்குன்று பகுதியை சேர்ந்த 63 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நேற்று முன்தினம் (02) முதல் தனது லொறியில் காத்திருந்துள்ளார்.

இந்நிலையில், இன்று அதிகாலை 12.30 அளவில் திடீரென ஏற்பட்ட நெஞ்சு வலி காரணமாக அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளை அருகிலிருந்தவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

எவ்வாறாயினும், குறித்த நபர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆசனத்தில் அமர்ந்தவரும் பியர் கிளாஸ் எடுத்தவரும்

அவரை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, எதிர்வரும் 10ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேபோல் கடந்த ஜூலை 11ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்து. அங்கிருந்து பியர் கிளாஸ் ஒன்றை எடுத்துச் சென்ற நபரொருவரும் பொலிஸாரால் நேற்று (3) கைது செய்யப்பட்டவர் ரங்கம பகுதியைச் சேர்ந்த 46 வயதான அவர், ஞாபகார்த்தமாகவே குறித்த பியர் கிளாஸை எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

# பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் ஒகஸ்ட் 15 ஆம் திகதிக்கு பின்னர் வெளியிடப்படும் என்றும், இந்த வருடத்திற்கான சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் ஏப்ரல் 2 ஆம் திகதிக்குப் பின்னர் நடைபெறுமென அவர் அறிவித்துள்ளார்.

கொரோனா தொற்று பரவினாலும் பாடசாலைகள் மீள மூடப்படாது எனவும், மாணவரொருவர் கொவிட் தொற்றுக்கு உள்ளானால், அவருடன் தொடர்பில் இருந்தவர்களை தனிமைப்படுத்திவிட்டு, கற்பித்தல் செயற்பாடுகளை தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர், பாடசாலை நடத்தும் விதம் தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய வழிகாட்டல்கள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியிடப்படும் என்றார்.

# ஜனாதிபதி ஒருவரால் ஆற்றப்பட்ட சிறந்த உரை

தான் செய்ய வேண்டுமென நினைத்திருந்த விடயங்களை ஜனாதிபதி முன்வைத்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

சொல்வதை செய்வது என்பது சவாலான விடயம். எனவே ,நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அனைத்து அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் ரணில் கூறியிருக்கும் விடயங்களை செய்ய வேண்டும் என்றார்.

# 9 மாவட்டங்களில் 12,289 பேர் நிர்க்கதி

327 வீடுகள் சேதமடைந்துள்ளன. அதிலொரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளது.

பாதிக்கப்பட்டோரில் 485 குடும்பங்களைச் சேர்ந்த 2,374 பேர், பாதுகாப்பான 15 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் நிலையம் குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில், நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி செய்கைகள் யாவும் முற்றாக சேதமடைந்துள்ளன.

# மூன்று நாட்கள் ஒத்திவைப்பு விவாதம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மூன்று நாட்கள் விவாதத்துக்கு வழங்குமாறு கட்சித் தலைவர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கமைய பாராளுமன்றம் எதிர்வரும் 09ஆம் திகதி பி.ப 1.00 மணிக்குக் கூடவிருப்பதுடன் பி.ப 4.30 மணி வரை விவாதம் நடைபெறும்.

அத்துடன், எதிர்வரும் 10 மற்றும் 12ஆம் திகதிகளில் மு.ப 10.00 மணி முதல் பி.ப 4.30 மணிவரை பாராளுமன்றம் கூடவுள்ளது. இந்த விவாதம் சபை ஒத்திவைப்பு விவாதமாக இடம்பெறும் என்றும், விவாதம் நிறைவடையும்போது வாக்கெடுப்பு நடத்தப்படாது என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் 09ஆம் திகதி 2022ஆம் வருடத்துக்கான 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் (வரவு-செலவுத்திட்டம்) தொடர்பில் முன்வைக்கப்படும் திருத்தச் சட்டமூலமும், எதிர்வரும் 10ஆம் திகதி 22வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதேநேரம், பாராளுமன்றக் கூட்டத்தொடர் அண்மையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இரத்துச் செய்யப்பட்ட குழுக்களைப் புதிய கூட்டத்தொடரில் மீண்டும் நியமிப்பது தொர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்கு அமைய தெரிவுக் குழுவை (Committee of Selection) எதிர்வரும் 09ஆம் திகதி அமைத்த பின்னர் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு உள்ளிட்ட ஏனைய குழுக்களை விரைவில் நியமிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

# சர்வகட்சி அரசாங்கத்தில் பலரும் இணையும் சாத்தியம்

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் பிரதான அரசியல் கட்சிகளுடன் தொடர்ச்சியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றார். அரசாங்கத்தின் பிரதான கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் முதல் சுற்று கலந்துரையாடலில் கலந்து கொண்டதுடன் இரண்டாவது கலந்துரையாடல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் இடம்பெற்றது. மூன்றாவது கலந்துரையாடல் தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களுடன் கலந்துரையாடியிருந்தார். இதன்போது ஜனாதிபதி முன்வைத்துள்ள வேலைத்திட்டத்துடன் இணைந்து செயற்பட இக்கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

அதேபோல் பிரதான எதிர்க்கட்சியுடனும் வேறு சில தரப்புகளை கொண்டு ஜனாதிபதி கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளார். இவற்றில் சில பேச்சுவார்த்தைகள் இரகசியமாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் ஒருசில உறுப்பினர்களும் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்வது குறித்து தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியையும், பாராளுமன்ற சுயாதீன குழுவையும் நாளை வெள்ளிக்கிழமை சந்தித்து கலந்துரையாட ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.


எனினும், தற்போதைய நிலைமைக்கு அமைய தேசிய சபையை அமைத்தால் அதில் பாராளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு, 19ஆவது திருத்தம், நாட்டின் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் பாராளுமன்ற கண்காணிப்பு குழு முறையை மீள அமுல்படுத்துவது உள்ளிட்ட அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் இக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதியை இன்று (04) மாலை 4 மணிக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சந்தித்து கலந்துரையாட உள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

# மருந்துப் பொருட்களை வழங்கியது அமெரிக்கா

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்கவின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த உதவித்திட்டங்கள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகள் மற்றும் மருத்துவப் பொருட்கள் மிகவும் அவசியமான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான அவர்களின் தொடர்ச்சியான முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்காக ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நேஷனல் நிறுவனத்திற்கு இலங்கை மக்களும் தூதரகமும் நன்றி தெரிவிப்பதாக தூதுவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நேஷனல், இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் மனிதாபிமான உதவிகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும், இதன் மூலம் நாட்டின் குடிமக்கள் சிறந்த கவனிப்பைப் பெறுவதாகவும் ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நேஷனல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் மாதங்களில் இலங்கைக்கான மேலதிக மருந்துப் பொருட்களைப் பெறுவதற்கு தூதரகம் மற்றும் ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நேஷனல் ஆகியவை சுகாதார அமைச்சுடன் தொடர்ந்து ஒத்துழைக்கும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# உபசாரம்...

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (03) ஆரம்பித்து வைத்ததன் பின்னர், பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தேனீர் உபசாரத்தில் கலந்துகொண்டார்.




# சகலரது உரிமைகளையும் பாதுகாப்பேன்



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

**எமது நாட்டிலே வாழுகின்ற மக்களும் பல்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர் . அவ்வாறு எந்த இனத்தைப் பிரதிநிதித்துவம் செய்தாலும் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற ரீதியிலேயே செயற்படுகின்றோம். அதேபோல் சகலரும் தமது கலாசார விழுமியங்களை பேணி வருவதற்கும், சமயங்களை பின்பற்றுவதற்கும் மற்றும் தமது தாய் மொழியை பயன்படுத்துவதற்கும் அனைவருக்குமுள்ள உரிமையை பாதுகாப்பேன். அவ்வாறே அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்த சமயத்துக்கு முன்னுரிமையளித்து, பௌத்த சமயத்தைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கும் அனைத்து சமயங்களினதும் உரிமைகளை பாதுகாப்பதற்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.**

> **பொருத்தமான முறைமை தொடர்பாக தேசிய இணக்கப்பாடொன்றுக்கு வந்ததன் பின்னர் சட்டமாக வரைந்து நடைமுறைப்படுத்துவேன்.**



### சகலரது ஒத்துழைப்பும் அவசியம்

நான் கஷ்டத்தில் விழுந்திருந்த ஒரு நாட்டையே பொறுப்பேற்றேன். கடுமையான பொருளாதாரப் பிரச்சினை ஒருபுறம். பாரிய மக்கள் எதிர்ப்பு மறுபுறம். எனினும் நாட்டுக்காக இந்த கடினமான சவாலை பொறுப்பேற்க நான் தீர்மானித்தேன். அதற்குக் காரணம் இருளுக்கு சாபமிட்டுகொண்டு இருப்பதை விட ஒரு விளக்கினையேனும் ஏற்றுவது நாட்டிற்காக நான் செய்யும் கடமை என நான் கருதியமையாகும். நாம் பாரிய அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளோம். அதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணையும் சவாலை வெற்றிகொண்டால் மாத்திரமே முடியும்.

### சர்வகட்சி அரசாங்கத்தில் ஒன்றிணையுங்கள்

பிரிந்து சென்றால் இப்பாராளுமன்றத்தில் இருக்கும் மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமன்றி முழு நாட்டு மக்களும் துன்பத்திற்கும் அழிவிற்கும் ஆளாகுவர். எனவே சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்காக ஒன்றிணையுமாறு நான் மீண்டும் இந்த பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துத் தரப்பினரிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். கடந்த காலத்தினை பின் தள்ளிவிட்டு நாட்டினைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணையுமாறு நம்பிக்கையுடன் அழைப்பு விடுக்கின்றேன்.

### நெருக்கடியை தீர்க்கின்றேன்

தற்போதுள்ள மின்வெட்டினை குறைத்துக்கொள்ள எம்மால் முடிந்துள்ளது. உரத்தைக் கொணடுவருவதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. சமையல் எரிவாயு பிரச்சினை தற்போது முழுமையாக தீர்க்கப்பட்டுவரும் நிலையில் உள்ளது. உணவுத் தட்டுப்பாடொன்று ஏற்படாதவாறு அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றினைக் கொள்வனவு செய்யும் பணி ஆரம்பிகக்ப்பட்டுள்ளது. பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதித் துறை என்பவற்றிற்கு ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

### மோடிக்கும் இந்திய அரசுக்கும் நன்றிகள்

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் எமக்கு வழங்கிய உயிர் மூச்சுக்கு நான் இலங்கை மக்கள் சார்பாக பிரதமர் அவர்களுக்கும், இந்திய அரசாங்கத்திற்கும், இந்திய மக்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எரிபொருளை கொண்டு வருவதற்காக ஏனைய நாடுகளிடமிருந்து கடன் உதவிகள் கிடைக்கும் வரையில் காத்திருக்கும் முறைமையிலே நாம் முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும் எனவே எமது நாட்டின் ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று ஊடாக எரிபொருளை கொணடுவருவதற்கான முறைமை ஒன்றினை நாம் ஆரம்பிகக் உள்ளோம்.

### முறையாக திட்டமிடப்படுகின்றது

மீண்டும் ஒருபோதும் எமது நாட்டிலே இவ்வாறான பொருளாதார நெருக்கடியொன்று ஏற்படாதவாறு பலமிக்க அடித்தளமொன்றினை இடுதல் வேண்டும். பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துதல் வேண்டும். பொருளாதார ஸ்திரத்தன்மையினை ஏற்படுத்தி, போட்டித்தன்மைமிக்க சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் பக்கம் மாற்றியமைத்தல் வேண்டும். அவற்றிற்குத் தேவையான அறிக்கைகள், திட்டமிடல், சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றினை தற்போது நாம் தயாரித்து வருகின்றோம்.

### ஐ.எம்.எப்புடன் நான்கு வருட வேலைத்திட்டம்

மீளெழுச்சிபெறும் ஆரம்ப கட்டமொன்றாக நாம் சரவ்தேச நாணய நிதியத்தோடு நான்குவருட வேலைத்திட்டமொன்று தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பித்தோம். ஆகஸ்ட் மாதத்திலிருந்து அந்த கலந்துரையாடல்களை மீண்டும் முன்னெடுத்துச் செல்வோம். ஆரம்பகட்ட உயர்மட்டத்திலான கலந்துரையாடல்களை துரிதமாகவும் சிறப்பான முறையிலும் முடிப்பது எமது எதிர்பார்ப்பாகும். இந்த திட்டத்தை இன்னும் சில தினங்களில் நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் முன்வைப்போம். அதன்பின்பு எமக்கு கடன் உதவிகள் வழங்கியுள்ள நாடுகளோடு கலந்துரையாடுவோம். அதேபோல் தனியார் கடனாளிகளோடும் கலந்துரையாடல்களை ஆரம்பிப்போம். அவர்களோடு உடன்பாட்டுக்கு வருவோம்.

> **தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேணடியமை அத்தியாவசியமான காரணி ஒன்றாகும்**

> **சரவ்தேச நாணய நிதியத்தோடு நான்குவருட வேலைத்திட்டமொன்று தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பித்தோம்**

### எமக்கு எதிராளிகள் இல்லை

வெளிநாட்டுக் கொள்கையில் உறுதியற்ற தன்மை காரணமாக எமக்கு சர்வதேச மட்டத்தில் அதிகளவிலான இழப்பீடுகள் மற்றும் பின்னடைவுகள் ஏற்பட்டன. நான் இந்த நிலைமையை மாற்றுவேன். உலகத்தில் சகல நாடுகளும் எமது நண்பர்கள். எமக்கு எதிராளிகள் இல்லை. நாம் எந்தவொரு தரப்பையும் சார்ந்தவர்கள் அல்லர். சகல நாடுகளோடும் நட்பு ரீதியான கொள்கையைப் பின்ற்றுவதனை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

### 22க்கு ஆதரவு தாருங்கள்

அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயற்பாட்டின் ஆரம்பமாக, 19 ஆவது திருத்தத்திலிருந்த அனைத்து நேர்மறையான விடயங்களையும் உள்ளடக்கி 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்ள நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக இந்த சபையின் முழுமையான ஆதரவினை நான் எதிர்பார்க்கின்றேன். எமக்கு தேவையான அனைத்தும் 22 ஆவது திருத்தத்தின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ள முடியாது போகலாம். அது எமது மறுசரீமைப்புத் தொடரின் முதலாவது அடித்தளமாகும். பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக்களை உடனடியாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். அந்த குழுக்கள் ஊடாகவும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புக்கிட்டும்.

### ஜனாதிபதி அரசரோ கடவுளோ அல்ல

ஒரு நாட்டின் சனாதிபதி என்பவர் மக்களுக்கு மேலால் வாழுகினற் அரசராக அல்லது கடவுளாக இருக்க வேணடியதில்லை. அவரும் பிரஜையில் ஒருவர். எனவே தனியான கொடி, இலச்சினை, தனியான கௌரவங்கள் மூலம் புனிதத்தன்மைக்கு ஆளாக்க வேணடியதில்லை.

### தமிழர்களுக்கான அரசியல் தீர்வு அவசியம்

நாம் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துகின்றோம். அரச உரிமைப்பத்திரதாரிகளுக்கு அறுதி உறுதிப் பத்திரம் வழங்குவோம். அரச மாடிவீடுகளில் வசிப்போருக்கு வீட்டு உரிமைகளை வழங்குவோம். தோட்டத்துறையில் வாழும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம். இங்கு பல வருட காலமாக தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேணடியமை அத்தியாவசியமான காரணி ஒன்றாகும். யுத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்ட அவர்கள் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தீர்க்க வேணடிய காணிப் பிரசச்னைகள் பல உள்ளன. அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நாம் புதிதாக சிந்திக்க வேணடியுள்ளது. வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கை தமிழ் மக்களுடன் நெருங்கிச் செயற்பட்டு, இலங்கையினை மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு அவர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொளவ்தற்கும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

### பெண்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

எமது நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையாக காணப்படுகின்ற பெண்கள் இன்னமும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், ஏனைய வித்தியாசங்கள், குறைபாடுகள் பலவற்றிற்கு முகம்கொடுத்து வருகின்றனர். இந்நிலையினை மாற்றியமைத்தல் வேணடும். அதற்குத் தேவையான அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளை நாம் எடுக்க வேண்டியுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான தேசியக் கொள்கை ஒன்றினை நான் அமுல்படுத்துவேன். இதற்குத் தேவையான சட்டதிட்டங்கள் நிதி அமைச்சினால் தயாரிக்கப்பட்டுவரும் நிலையில் உள்ளன. எமது நாட்டின் ஜனாதிபதி முறைமையினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேணடுமா? நாட்டிற்கு மிகவும் பொருத்தமான முறைமை எது? ஆட்சி முறையானது எவ்வாறான மறுசீரமைப்புகளுக்கு உட்பட வேணடும்? உள்ளிட்ட அனைத்து விடயங்களும் மக்கள் சபையின் ஊடாக கலந்துரையாடப்படும். நாட்டிற்கு மிகவும் பொருத்தமான முறைமை தொடர்பாக தேசிய இணக்கப்பாடொன்றுக்கு வந்ததன் பின்னர் அம்முறைமையினை சட்டமாக வரைந்து நடைமுறைப்படுத்துவேன்.



முஸ்லிம் தலைமைகள்

# தவறவிடக் கூடாது

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு தமிழ் தேசியf; கூட்டமைப்பு ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை, காலத்துக்கேற்ற முடிவு, இது மூத்த தமிழ் தலைவர் சம்பந்தன் ஐயாவின் அரசியல் தீர்க்கதரிசனத்தின் அடையாளமாக உள்ளது என சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் ஐயாவின் இந்த முடிவு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அடைந்து கொள்ளும் வாசலைத் திறக்க வைத்துள்ளது. இதனை நானும் வரவேறகிறேன்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சர்வகட்சி அரசாங்கம் அவசியம்



அமைக்கப்பட வேண்டும். இந்தத் தேவையிலிருந்து பொறுப்புள்ள அரசியல் கட்சிகள் விலகியிருக்க முடியாது.

இந்தத் தருணத்தை நன்குணர்ந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு இரட்டைக்காய்களை பறித்துள்ளது. ஒன்று மக்களின் நெருக்கடியை போக்க உதவுவது, இரண்டாவது தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க தருணம் பார்ப்பது.

எனவே, ஒருவகையில் இதுவும், பேரம்பேசும் சக்தியின் ஒரு வடிவமாகவே பார்க்கப்பட வேண்டும்.

எனவே, இன்றைய நிலையில் அரசாங்கத்துக்கு எழுந்துள்ள தேவையை அறிந்து, முஸ்லிம் தலைமைகளும் இவ்வாறான அரசியல் வியூகங்களை வகுக்க வேண்டும். இழந்து போயுள்ள பேரம்பேசும் பலத்தை இலகுவாக பயன்படுத்த தற்போது கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை முஸ்லிம் தலைமைகள் தவறவிடக் கூடாது" என்றும் அமைச்சர் நஸீர் அஹமட் கேட்டுக்கொண்டுள்ளார்.

வடக்கு அரச

# அதிகாரிகளுக்கு எச்சரிக்கை



■ நிதர்சன் வினோத்

வடக்கு அரச அதிகாரிகள் மீதான ஒழுக்காற்று விசாரணையின் போது குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை அல்லது பதவி நீக்கம் செய்யப்படுமே அல்லாமல் இடமாற்றம் வழங்கப்பட மாட்டாது என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், "வட மாகாணத்தில் கடமையாற்றும் அரச அதிகாரிகள் மீது யாராவது ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுகள் முன்வைத்தால் மாகாண ஆளுநர் என்ற நீதியில் ஒழுக்கற்று விசாரணை மேற்கொள்ளப்படும்.

விசாரணையின் அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட மாட்டாது தண்டனை அல்லது சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்படும்.

அரச உத்தியோகத்தர்கள் சேவையின் நிமிர்த்தம் இடமாற்றத்திற்கு உரித்துடையவர்கள். அவர்களின் இடமாற்றம் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் விசேட சேவை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும்.

மாகாண இடமாற்றங்கள் நியமனங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுமே அல்லாமல் ஒழுக்காற்று விசாரணையால் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படாது.

ஆளுநரால் மேற்கொள்ளப்படும் அதி விசேட சிறப்பு தர அதிகாரிகளின் நியமனத்தை ஆளுநரால் திரும்ப பெற முடியும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# 100 நாட்கள் செயல்முனைவு மக்கள் குரல்

■ வடமலை ராஜ்குமார்

"வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் மூன்றாம் நாள் போராட்டம் நேற்று (03) திருகோணமலை மாவட்டத்தில் ஆனந்தபுரி விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெற்றுள்ளது.

இப் போராட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், செயற்பாட்டாளர் என 150 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனக் கோரி நடைபவணியாக வருகைதந்து மைதானத்தில் கூடியிருந்து தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்

அத்துடன் அடுத்தக்கட்ட போராட்டமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் கரத்துறைப்பற்றில் இன்று (04) வியாழக் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கலாநிதி ஹாறுன் புதிய பீடாதிபதி

■ எம்.என்.எம்.அப்ராஸ்



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் புதிய பீடாதிபதியாக இரசாயனவியல் துறையின் தலைவர் கலாநிதி முகம்மட் ஹனிபா ஹாறுன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில், பிரயோக விஞ்ஞான பீடத்தின் கேட்போர் கூடத்தில் 2022.08.03 அன்று இடம்பெற்ற விஷேட ஒன்றுகூடலின் போதே கலாநிதி எம். எச். ஹாறுன் புதிய பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

பொத்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஹாறுன், ஆரம்பக் கல்வியை பொத்துவில் மஹா வித்தியாலயத்திலும் இரண்டாம் நிலைக் கல்வியை கல்முனை சாஹிரா தேசிய கல்லூரியிலும் கற்றிருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்று தேர்ச்சி பெற்று, பின்னர் கலாநிதி பட்டத்துக்காக இலங்கை, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா போன்ற இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் கற்றிருந்தார்.



# அந்தோனியார் திருச் சொரூபங்கள் உடைப்பு

■ ரொசேரியன் லெம்பர்ட்

முசலி - கஜிவத்தை பகுதியில் காணப்பட்ட புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் உள்ள தூய அந்தோனியார் திருச் சொரூபங்கள் இரண்டு இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டுள்ளதாக கொக்குப்படையான் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிற்றாலயத்தில் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1 மற்றும் 3 அடி உயரம் கொண்ட அந்தோனியார் திருச் சொரூபங்களே உடைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்து உடனடியாக சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக கொக்குப்படையான் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இளம் குடும்பஸ்தர் கொலை;

# தந்தை, மகனுடன் ஆறு பேர் கைது

■ க. அகரன்



வவுனியா - ஆச்சிபுரம் பகுதியில் ரஞ்சா என்று அழைக்கப்பட்ட 30 வயதான இளம் குடும்பஸ்தர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் ஆறுபேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களிற்கு முன்பு இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் குடும்பஸ்தர் ஒருவர் கட்டுத்துப்பாக்கியால் சுடப்பட்டும் வாளால் தாக்கப்பட்டும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் தந்தை ,மகன் உட்பட ஆறு பேரை கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் இடியன் துப்பாக்கி மற்றும் வாள்களும் மீட்கப்பட்டன.

# கசிப்பு காய்ச்சிய இருவர் கைது



இராமநாதபுரம் - புதுக்காடு, காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் இருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு, தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 600 லீற்றர் கோடாவும், 62 போத்தல் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்களை, எதிர்வரும் 09ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.



# தேக்கு குற்றிகளை ஏற்றிச்சென்றோர் கைது

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் வீதியில், 9ம் கட்டைக்கும் கற்குவாரிக்கும் இடைப்பட்ட பகுதியில் தேக்கு மரக் குற்றிகளை களவாக ஏற்றிச் சென்றவர்களை இராணுவத்தினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

வாகனத்தில் தேக்கு மரக் குற்றிகள் இருப்பதை கண்ட இராணுவத்தினர் வனவளத் திணைக்கள அதிகாரிகளிடம் தேக்கு மரக் குற்றிகளை ஏற்றி சென்ற வாகனத்தினையும் நபர்களையும் ஒப்படைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தேக்கங் காடுகள் அழிக்கப்பட்டு தேக்கங் குற்றிகள் களவாக எடுத்துச் செல்லப்படும் சம்பவங்கள் கடந்த பல மாதங்களாக தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றது.

துணுக்காய், ஒட்டுசுட்டான், கரைதுறைபற்று, மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள தேக்கங் காடுகளில் இருந்தே களவாக மரங்கள் வெட்டப்பட்டு, இரவு வேளைகளில் மரங்கடத்தல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தங்கம் அணியாதீர்கள்

■ தில்லைநாதன்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவில் பங்கேற்கும் அடியவர்கள் தங்க நகைகள் அணிவதையும் மற்றும் பணத்தை எடுத்துச் செல்வதையும் தவிர்க்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.


அத்துடன், வீட்டில் ஒருவராவது தங்கியிருப்பதுடன் அல்லது பாதுகாப்பாக வீட்டைப் பூட்டிவிட்டு ஆலயத்துக்குச் செல்லுமாறும் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 25 நாள்கள் திருவிழா மற்றும் திருக்கல்யாணம், வைரவர் சாந்தி என 27 நாள்கள் ஆலயத்தில் அடியவர்கள் பெருந்திரளாகப் பங்கேற்பர்.

வழமைபோன்று சீருடை மற்றும் சிவில் உடையில் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். எனினும், திருடர்கள் மற்றும் கொள்ளையர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.


ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் தமது தங்க நகைகள் மற்றும் பணத்தை பாதுகாப்பாக வைத்திருக்குமாறு யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகேட்டுள்ளார்.

இயன்றளவு தங்க நகைகளை அணிவதைக் குறைப்பதுடன் பணத்தை எடுத்துவருவதைத் தவிர்க்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



# சந்திரகாந்தன் எம்.பியின் தந்தை காலமானார்

■ க.விஜயரெத்தினம்,பைஷல் இஸ்மாயில்



மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனின் தந்தை ஆ.சிவநேசதுரை, நேற்று (03) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 75 ஆகும்.

அவர், தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஆயுட்கால உறுப்பினரும், கோரளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமாவார்.

மட்டக்களப்பு பேத்தாழையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 7 பிள்ளைகளின் தந்தையாவார். அன்னாரது மறவை தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கு பேரிழப்பாகும் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.



# காத்தான்குடியில் 1,510 லீற்றர் சிக்கியது

■ கனகராசா சரவணன்

காத்தான்குடியில் தனியார் நிறுவனமொன்றை முற்றுகையிட்ட பொலிஸார், வியாபாரத்துக்காக பரல் மற்றும் தண்ணிர் தாங்கியில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 1,510 லீற்றர் டீசலை கைப்பற்றியுள்ளனர். அத்துடன், ஒருவரையும் கைது செய்துள்ளார்.

இந்த சுற்றிவளைப்பு செவ்வாய்கிழமை (02) இரவு இடம்பெற்றதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவரை, நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை ஆரையம்பதி பகுதியில் வியாபாரத்துக்காக பதுக்கி வைத்திருந்த 135 லீற்றர் டீசலுடன் ஒருவர், ஞாயிறுக்கிழமை (31) கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது

21/4 தாக்குதல்

# 50 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

■ கனகராசா சரவணன்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த 50 பேரையும் எதிர்வரும் 9 ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (02) உத்தரவிட்டார்.

இவர்கள் அனைவரும் காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர். அவர்கள், சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணி வந்தனர் என்றக் குற்றச்சாட்டுகளின் கீழ், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கோண காதல் கத்திக்குத்தில் முடிந்தது



■ எஸ்.ஆராச்சி

தெரணியகல நகரிலுள்ள பாடசாலையில் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

பாடசாலையில் வைத்து இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (2) பகல் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலையில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனே அந்த மாணவனை கத்தியால் குத்தியுள்ளதாக தெரணியகல பொலிஸார் தெரிவித்தனர்.

கத்தியால் குத்திய மாணவன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், காயத்துக்கு உள்ளான மாணவன் தெரணியகல வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

சந்தேகநபர் நேற்று (3) அவிசாவளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது இரண்டு இலட்ச ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், நன்னடத்தை அறிக்கையையும் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முக்கோண காதலே இந்தச் சம்பவத்துக்கு காரணம் என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# நிதியுதவி வழங்க சஜித் இணக்கம்


### இராதா எம்.பி தகவல்

■ டி.ஷங்கீதன்

மலையகத்தில் சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச முன்வந்திருப்பதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவிக்கின்றார்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான காலநிலை தொடர்பாகவும் ஏற்பட்டிருக்கின்ற இழப்பீடுகள் தொடர்பாகவும் எதிர்க்கட்சி தலைவரின் கவனத்திற்கு கொண்டு வந்ததை தொடர்ந்தே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனை அறிவித்துள்ளார்.

மேலும் இந்த நிதி உதவியை



மிகவிரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன், ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக நுவரெலியா மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டதுடன், இது தொடர்பாக விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்றார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க பணித்துள்ளதுடன் வேறு தேவைகள் இருப்பின் தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வருமாறும் மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் நிலவுமாக இருந்தால் வர்த்தக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.







## இ.தொ.காவின் நிவாரணம்

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் நிவாரண உதவிகளை வழங்கிவைத்தது. தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஆடைகள், படுக்கை விரிப்புகள், தலையணைகள் மற்றும் குளிர்தாங்கும் துணிகள் என பல பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஆ.ரமேஸ்)



## நோட்டன் பிரதான வீதி தாழிறங்கியது

■ செ.தி. பெருமாள்

நோட்டன் -மஸ்கெலியா பிரதான வீதியின் 5 ம் கட்டை பகுதியில் பிரதான வீதி நேற்று (3) அதிகாலை 3 மணியளவில் தாழிறங்கியுள்ளது.

இதனால் அவ்வீதி ஊடான போக்குவரத்துகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் இப்பகுதியில் இன்னும் சில பகுதிகள் தாழிறங்கும் அபாயம் உள்ளதென பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு, மஸ்கெலியா மற்றும் நோட்டன் போக்குவரத்து பொலிஸார் வாகன சாரதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பன்மூர் இளைஞன்



■ சடலமாக மீட்பு

06.ரஞ்சித் ராஜபக்ஸ, எம். கிருஸ்ணா

ஹட்டன்- பன்மூர் குளத்தில் தவறி விழுந்த இளைஞன் நேற்று(3) முற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எபோட்சிலி- மொன்டிபெயார் தோட்டத்தை சேர்ந்த 22 வயதுடைய மைக்கல் பவன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட கடற்படை சுழியோடிகள் மூலம் மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

முதலாம் திகதி இரவு எட்டு மணியளவில் ஹட்டன் நகரிலிருந்து இரண்டு நண்பர்களுடன் குறித்த இளைஞன் மொன்டிபெயார் தோட்டத்திலுள்ள தனது வீட்டிற்கு நடந்து சென்ற போதே வீதியோரத்திலுள்ள குளத்தில் விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற வானிலையால் குறித்த பன்மூர் குளத்தில் நீர் அதிகரித்து காணப்பட்டதாகவும் இதன்போது இரவு அவ்வழியே தனது நண்பர்களுடன் நடந்து சென்ற இளைஞன் வழுக்கி விழுந்திருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### கேகாலையில் எலிக்காய்ச்சல்

## இருவர் மரணம் 323 பேர் பாதிப்பு

■ எஸ். ஆராச்சி



கேகாலை மாவட்டத்தில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் இரண்டு பேர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர் என கேகாலை மாவட்ட தொற்று நோய் தொடர்பான விசேட வைத்தியர் சுஜிவ பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் இதுவரை 323 பேர் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார். குறித்த இரண்டு மரணங்களும் வரக்காப்பொல மற்றும் கலிகமுவ ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் பதிவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அரநாயக்கவில் 55 பேரும் மாவனெல்லை- 46, ரம்புக்கனை- 23, கேகாலை- 42, கலிகமுவ- 26, வரக்காப்பொல-30, புளத்கொஹுபிட்டிய- 20, யட்டியாந்தோட்டை- 19, ருவன்வெல்ல- 21 தெஹியோவிட்ட- 34 தெரணியகலயில் 7 பேர் இதுவரை எலிக்காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்றார்.

காய்ச்சலுடன் உடல் வலி இதன் அறிகுறி என தெரிவித்த அவர், நோய் அறிகுறிகள் காணப்பட்டால் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு உடனடியாகச் சென்று சிகிச்சைப் பெற வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

### மாத்தளையில் இருவருக்கு காயம்

## 34 பேர் தற்காலிக முகாம்களில்

■ ரவீந்திரன்ராஜ்

மாத்தளை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக இருவர் காயமடைந்துள்ளதுடன், 34 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என மாத்தளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 2 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், 7 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தோட்டை- சக்கரவத்த பகுதியில் வீடொன்றின் மீது நேற்று (3) பகல் மரம் முறிந்து விழுந்ததில் வீட்டினுள் இருந்த தாயும் மகளும் காயமடைந்து மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.





### ஹைட்ரி வெள்ளத்தில்

## 22 குடும்பங்கள் பாதிப்பு

■ எஸ்.கணேசன்

வட்டவளை- ஹைட்ரி தோட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 22 வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

மகாவலி கங்கைக்கு நீரேந்திச் செல்லும் ஹைட்ரி ஆற்றின் பெருக்கெடுப்பு காரணமாகவே இந்த வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

குறித்த தோட்டத்தில் கடந்த மாதமும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட 22 வீடுகளுக்குள் இன்று மீண்டும் வெள்ளம் புகுந்துள்ளது.

இந்த 22 வீடுகளில் குடியிருந்த 80 பேர் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தற்காலிகமாக தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகள் பஸ்பாகே பிரதேசம் செயலகம் மற்றும் நலன்விரும்பிகளால் வழங்கப்படுவதாக அப்பகுதிக்கான கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

### பெரன்டினா நிறுவனத்தால்

## கடனுதவி வசதிகள் வழங்கி வைக்கப்பட்டன



■ டி.ஷங்கீதன்

நுவரெலியா மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப பெரன்டினா நிறுவனம் 8 கோடியே 72 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவை முதலீடு செய்கின்றது என பெரன்டினா நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் ரஹீம் தெரிவித்தார்.


இதற்கமைய நுவரெலியா பெரன்டினா நிறுவனத்தின் ஊடாக 1,000 குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் வீதம் மூன்று மாதங்களுக்கும் சுயதொழிலுக்காக 18,070 பேருக்கு 4,000 ரூபாய் வீதமும் வழங்கி வைக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக முதலாம் திகதி, நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட 250 பேருக்கான கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத், பெரன்டினா நிறுவனத்தின் பணிப்பாளர் ஜகத் கொடகந்த, பிரதி பொது முகாமையாளர் ரஹீம் உட்பட பெரன்டினா நிறுவனத்தின் உறுப்பினர்களும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

### ரயில் போக்குவரத்தை சீர் செய்யும்

## பணிகளில் இராணுவத்தினர்



■ ரஞ்சித் ராஜபக்ஷ

மலையக ரயில் மார்க்கத்தின் நாவலப்பிட்டிய ரயில் நிலையத்திலிருந்து நானுஓயா வரை 15 இடங்களில் மண்சரிவு மற்றும் கற்பாறைகள் சரிந்துள்ளதால் மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

இந்த நிலையில் தண்டவாளங்களில் விழுந்துள்ள மண்மேடு, கற்களை அகற்றும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மலையக ரயில் போக்குவரத்தை சீர்செய்வதற்கான ஒத்துழைப்பை இராணுவத்தினர் வழங்கி வருவதாக, நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரஞ்சித் அலஹகோன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இங்குருஓயா, கலபொட, ஹட்டன், வட்டவளை, தலவாக்கலை, கிரேட் வெஸ்டன், நானுஓயா ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

### பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின்

## வான்கதவுகளும் திறக்கப்பட்டன

■ மொஹொமட் ஆஸிக்

மத்திய மாகாணத்தில் தொடர்ந்தும் நிலவுகின்ற கடும் மழை காரணமாக, பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் எட்டு வான் கதவுகளும் நேற்று (3) அதிகாலை முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

நீர்த்தேக்கத்தின் எட்டு வான் கதவுகள் மூன்று அடி 10 அங்குலம் வீதம் திறக்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் ஒரு செக்கனுக்கு 28,000 கன அடி நீர் மஹாவலி கங்கைக்கு செல்லுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.



# காலந்தாழ்த்தினால் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்துவிடும்

வீதிகளில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பொதுப்போக்குவரத்தில் ஓரளவுக்கு சௌகரியமாக பயணிக்க முடிகின்றது. எரிபொருள் மற்றும் அரிசியின் விலைகளும் குறைந்துள்ளன. என்பதெல்லாம் பொதுமக்களால் பேசப்படுகின்றன.

ஆக, கடுமையான நெருக்கடியில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக நாடு வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றது.

எனினும், பதுக்கல்களிலும், கறுப்பு சந்தை வர்த்தகத்திலும் ஈடுபடுபவர்கள், வழமைக்குத் திரும்பிக்கொண்டிருப்பதை விரும்பமாட்டார்கள் என்பது மட்டுமே உண்மையாகும் ஏனெனில், கொள்ளை இலாபமீட்ட முடியாமற் போய்விடும்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை ஆற்றும் போது, “இருளுக்கு சாபமிடுவதைவிட, ஒரு விளக்கையாவது ஏற்றுவது , நாட்டுக்காக நான் ஆற்றும் கடமை என நினைத்தேன்” எனக் கூறியமையை ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையிலும் பிரயோகித்துப் பார்க்கவேண்டும்.

“முடியாது”, “இல்லை” “இயலாது” என்ற சொற்பதங்களை பயன்படுத்தல் இயலாமையின் வெளிப்பாடாகும். “நமக்கென்ன” என்று ஒதுங்கிப்போவது, பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க அஞ்சுவோரின் எண்ணமாகும். ஆனால், நெருக்கடியான சூழ்நிலையில் முன்வந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களை பலப்படுத்தவேண்டும்.

இதனோர் அங்கமாகவே, சர்வகட்சி அரசாங்கத்துக்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும், ஜனாதிபதி, பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் பச்சைக்கொடியை காண்பித்துள்ளது.

எனினும், “தேசிய அரசாங்கத்துக்கான காலவரையறை இன்றேல் பேசுவதில் அர்த்தமில்லை” என பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

நாட்டில் ஜனநாயகம் கட்டிக்காக்கப்படவேண்டுமாயின் பலமான எதிர்க்கட்சி இருந்தே ஆகவேண்டும். நெருக்கடி நிலைமையை பயன்படுத்தி, தேசிய அரசாங்கமொன்றை அமைத்து, வரப்பிரசாதங்களை கொடுத்துவிட்டால், தேர்தலொன்றுக்குச் செல்லாமல் நீண்டகாலத்துக்கு ஆட்சியை இழுத்துக்கொண்டு செல்லமுடியும்.

தங்களுக்கான நேரம் வந்தவுடன் தேர்தலுக்குச் சென்றால், தனியொரு கட்சி பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகளும் அதிகமாகவே இருக்கும். அவ்வாறான ஆட்சிக்கு வித்திட்டால், அதுவே சர்வாதிகார ஆட்சியாக அமைந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

ஆகையால், கட்சி அரசியலை ஒருசில மாதங்களுக்கேனும் ஓரமாய் ஒதுக்கிவைத்துவிட்டு, அரசியல் ஸ்திரதன்மையை ஏற்படுத்தி, பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டு, மக்களின் பிரச்சினைகளுக்கு அவசரமாக தீர்வு காண முயலவேண்டும் இல்லையேல் பிரச்சினைகள் விஸ்வரூபமெடுத்துவிடும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

இரவுக்கும் பகலுக்கும் வித்தியாசம் தெரியாமலேயே வாழும் கூட்டமும் உண்டு. எந்த நேரமும் உறக்கத்துடன் தன்னிலை மறப்பவர்கள், மது, போதைப் பிரியராகவும் இருக்கிறார்கள்.

ஆனால், சோம்பேறிகள் வேறு இரகத்தைச் சேர்ந்தவர்கள். இது விடயத்தில், வசதியான குடும்பத்தில் இருப்பவர்களை உதாரணமாக எடுத்துக் கொண்டால், உலகம் உருண்டையானது என்பதும் தெரியாமல், கல்வி கற்றுத் தொழில் தேடவேண்டும் என்ற விவஸ்தை கூட இல்லாமல் சிலர் வாழ்கின்றார்கள். இவர்கள், வறியவர்கள் மட்டுமல்ல; பரதேசிகள் ஆவார்.

குறைந்த வருமானத்திலும் குடும்பத்துடன் சந்தோசமாக வாழ்பவரே, சொர்க்கத்து தேவர்களை விட, உயர்ந்த நிலையில் இருப்பவர் ஆகிறார்.

இன்றைய உலகில், எதிர்காலம் பற்றி அறியாமல் வாழக்கூடாது. உலகம் சுழலும்போது, வாழ்க்கை அமைப்பும் மாறும். அதைத்தான் மாற்றம் என்கின்றோம்.

மாற்றங்களுடன் நாம் எப்படியும் இணங்கித்தான் ஆகவேண்டும். மாற்றங்களை சிந்தித்து, தேர்ந்தெடுத்துக் கொள்வதே புத்திசாலித்தனம். இஷ்டத்துக்கு வாழ்வது, புத்திகெட்ட வேலை. விழிப்புடன் வாழ்வதே வெற்றி!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# கூட்டமைப்பின் தலைமைத்துவத்துக்கான கோரிக்கை



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவத்தில் இருந்து, இரா.சம்பந்தன் விலகிக் கொள்ள வேண்டும் என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

சம்பந்தனின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், கூட்டமைப்புக்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டு, அரசியல் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்கிற கோரிக்கை, கடந்த பொதுத் தேர்தல் காலம் முதல் முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஆனால், கூட்டமைப்பின் தலைமைத்துவத்தில் இருந்து விலகும் எண்ணம் எதையும், சம்பந்தன் இந்தத் தருணம் வரையில் வெளிப்படுத்தவில்லை.

மாறாக, தன்னால் செய்ய முடியாத காரியங்களை, தன்னுடைய நிழலாக கருதும் எம்.ஏ. சுமந்திரனை முன்னிறுத்தி அவர் செய்து வருகிறார். கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவராகத் தன்னால் கலந்து கொள்ள முடியாத கூட்டங்களுக்கு, சுமந்திரனை அவர் முன்னிறுத்தி இருப்பதும் அதன் போக்கில்தான்.

முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னராக தமிழர் அரசியலில், சம்பந்தனின் தலைமைத்துவம் என்பது தவிர்க்க முடியாத அம்சங்களைக் கொண்டது. விடுதலைப் புலிகளின் ஆளுகையோடு தோற்றுவிக்கப்பட்ட கூட்டமைப்பு, அவர்களின் காலத்தின் பின்னரும் ஓர் அரசியல் சக்தியாக நிலைத்து நின்றமைக்கு, சம்பந்தனின் அனுபவமும் அணுகுமுறையும் முக்கிய காரணங்களாகும்.

2010 பொதுத் தேர்தல் காலத்தில், கூட்டமைப்பில் இருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குழுவினர் வெளியேறி, தனிக்கட்சி அமைத்துக் கொண்ட பின்னரும், கூட்டமைப்பே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்கிற தோரணையை தக்க வைப்பதற்காக, சம்பந்தன் மிகத் தீவிரமாக செயலாற்றினார். அதுதான், புலிகள் காலத்துக்குப் பின்னரான கடந்த 13 ஆண்டுகளாக, கூட்டமைப்பு நிலைத்திருப்பதற்கு காரணம்.

அத்தோடு, இந்தியாவோடும் மேற்கு நாடுகளோடும் அவர் பேணிக் கொண்ட இராஜதந்திர இணக்கம் (!) கூட்டமைப்பை பாரிய பிளவுகள் இன்றி நிலைபெறவும் காரணமானது. ஆனால், தன்னுடைய காலத்துக்குப் பின்னரான கூட்டமைப்பின் எதிர்காலம் தொடர்பில், அவர் போதிய கவனம் செலுத்தவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன.

தமிழ்த் தேசிய அரசியலில் கட்சிகளும் இயக்கங்களும், பல்கிப்பெருகியமைக்கான அடிப்படைக் காரணம், அந்தக் கட்டமைப்புக்களுக்குள் பெரும்பாலும் ஜனநாயக வெளி பேணப்படுவதில்லை. அதுபோல, ஒற்றைத் தலைமைத்துவம் தொடர்பிலான பேராசையால், இரண்டாம் கட்டத் தலைவர்கள் வளர்வதற்கான சந்தர்ப்பங்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

அதனால், துரோகி அடையாளப்படுத்தல்கள் இலகுவாக முன்வைக்கப்பட்டு கட்சிகள், இயக்கங்களை விட்டு பலரும் விலக்கப்பட்டு இருக்கிறார்கள்; அல்லது, விலகியிருக்கிறார்கள். அதன் பின்னர், அவர்கள் துப்பாக்கிகளுக்கு இரையாகாமல் இருந்தால், புதிய கட்சி அல்லது இயக்கத்தை ஆரம்பித்து, தலைவர்கள் ஆவார்கள்.

அருணாச்சலம் மகாதேவாவை தமிழினத் துரோகியாக சித்திரித்த ஜி.ஜி. பொன்னம்பலம், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை தோற்றுவித்தார். அவர் போட்ட விதையே, அவரைத் தமிழரசுக் கட்சி வடிவில் கருவறுத்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியை பெரும் நம்பிக்கையாகக் கொண்டிருந்த இளைஞர்கள், அது தோற்றுப்போன தருணத்தில், ஆயுதப் போராட்ட இயக்கங்களைத் தொடங்கினார்கள். அப்போதும், கூட்டணியை ‘தமிழினத் துரோகி’கள் என்றே இளைஞர்கள் அடையாளப்படுத்தினார்கள்.

டெலோவும் புளொட்டும் தங்களின் இயக்கங்களுக்கு உள்ளேயே நிகழ்த்திய பல படுகொலைகளை, புலிகள் மீது சுமத்திவிட்டு தப்பித்துக் கொண்ட வரலாறும் உண்டு. இறுதியாக, புலிகள் அனைத்து இயக்கங்களையும் கட்சிகளையும் துப்பாக்கி முனையில் அடக்கிவிட்டு, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் ஆனார்கள்.

இந்த மனநிலையில் இருந்து, தமிழர் அரசியல் சிந்தனை பெரும் அனுபவங்களுக்குப் பின்னாலும் கூட, கற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக, முள்ளிவாய்க்கால் முடிவு போன்றதொரு படுகுழிக்குள் வீழ்ந்த பின்னரும் கூட, கற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் பெரும் அபத்தம்.

துரோகி அடையாளப்படுத்தல் அரசியலை ஜி.ஜி. பொன்னம்பலம் என்று ஆரம்பித்து வைத்தாரோ, அது ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்த பின்னரும்கூட, இன்னமும் அடங்கவில்லை. சம்பந்தன், கூட்டமைப்பின் தலைமைத்துவத்தில் இருக்கும் போது, பொன்னம்பலத்தின் பேரனான கஜன் பொன்னம்பலமும் அதே துரோக அரசியலை முன்னிறுத்திவிட்டுத்தான் புதிய கட்சி தொடங்கினார்.

ஏன், சம்பந்தனால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்டு, முதலமைச்சர் பதவி கொடுத்து அழகுபார்க்கப்பட்ட சி.வி. விக்னேஸ்வரனும்கூட, கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை நோக்கி துரோக பாடல் பாடித்தான், புதிய கட்சியை ஆரம்பித்தார். இன்றைக்கு அவர், ரணிலுக்கு ஆதரவளித்து செயற்படுகின்ற நிலையை, அவரது கட்சியைச் சேர்ந்த கந்தையா அருந்தவபாலனே துரோக அரசியலாக சித்திரிக்கிறார். கட்சியினரிடம் கலந்தாலோசிக்காது, விக்னேஸ்வரன் தனிப்பட்ட முடிவுகளை எடுப்பதாக அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

தமிழர் அரசியலில் ஜனநாயக மாண்பு பெரும்பாலும் பேணப்படுவதில்லை. அல்லது, அதற்கு யாரும் தங்களை பழக்கப்படுத்திக் கொண்டதில்லை என்பதற்கு, கூட்டமைப்புக்கு உள்ளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு உள்ளும் விக்னேஸ்வரனின் கட்சிக்கு உள்ளும் தலைமைத்துவத்துக்கும் இரண்டாம் கட்ட தலைமைகளாக அடையாளம் பெறுபவர்களுக்கும் இடையில் நிகழும் முரண்பாடுகள், முட்டல் மோதல்களைப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும்.

தமிழ்த் தேசிய அரசியலில் ஒருவர், கட்சி அல்லது இயக்கமொன்றுக்கு தலைவராக வந்துவிட்டால், அவரின் ஆயுள்பூராவும் அந்தப் பதவியில் இருந்துவிட நினைக்கிறார்கள். சம்பந்தன், விக்னேஸ்வரன், மாவை சேனாதிராஜா, கஜன் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், த. சித்தார்த்தன் என்று, இன்று இருக்கின்ற அனைவருமே அதற்கான சாட்சிகள்.

அப்படியான நிலையில், கூட்டமைப்பின் தலைமைத்துவத்தில் இருந்து, சம்பந்தனை விலகக் கோரும் நிலை என்பது ஆச்சரியத்துக்குரியது. ஏனெனில், கூட்டமைப்பின் தலைமைத்துவத்தில் இருந்,து சம்பந்தனை விலகக்கோரும் செல்வம் அடைக்கலநாதன், டெலோவின் தலைமைத்துவத்துக்கு வந்ததில் இருந்து, அதன் அதிகார பதவியில் மாற்றங்களைச் செய்ய, அவர் ஒருபோதும் சம்மதிக்கவில்லை. பெயருக்கு பதவிகளை உருவாக்க அவர் இணங்கி இருக்கிறாரே அன்றி, அந்த இயக்கத்தின் அதிகாரம்மிக்க தலைவராக செல்வமே இன்றுவரை இருக்கிறார்.

செல்வத்துக்கோ கூட்டமைப்பின் இன்னொரு கட்சியின் தலைவருக்கோ, சம்பந்தனின் பதவி விலகல் அவசியமாகத் தோன்றுவது, சம்பந்தனின் காலத்துக்குப் பின்னராக, கூட்டமைப்பில் தங்களின் இடத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் சார்ந்த போக்கிலாகும்.

ஏனெனில், சம்பந்தனின் தலைமைத்துவத்தில் இருந்தது போன்றதொரு சூழல், சம்பந்தன் இல்லாத கூட்டமைப்பில் தங்களுக்கு வாய்க்காது என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான், கூட்டமைப்பைப் பதிவு செய்து, அதில் தங்களின் இடத்தை உறுதிப்படுத்த நினைக்கிறார்கள்.

சம்பந்தனின் காலத்துக்குப் பின்னரான கூட்டமைப்பின் தலைமைத்துவம் என்பது, கூட்டுத்தலைமையால் வழிநடத்தப்பட வேண்டும் என்கிற விடயமும் செல்வத்தாலும் சித்தார்த்தனாலும் முன்வைக்கப்படுவதும் அதன்போக்கில்தான்.

அத்தோடு, கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை இதுவரை காலமும் தமிழரசுக் கட்சி வைத்துக் கொண்டிருக்கின்றது. எனவே, எதிர்காலத் தலைமை சுழற்சி முறையில், டெலோவுக்கு அல்லது புளொட்டுக்கு வழங்கப்பட வேண்டும் என்கிற விடயம் முன்வைக்கப்படுவதும் அதனால்தான்.

கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், அதைக் கட்சியாக பதிவு செய்ய சில நடவடிக்கைகள் கொழும்பில் முன்னெடுக்கப்பட்டன. அதற்கான யாப்பை எழுதும் பணிகளும் நடந்தன. ஆனால், கூட்டமைப்பைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்களுக்கு, கிளிநொச்சியில் இருந்து தொலைபேசி அழைப்பெடுத்த சுப. தமிழ்ச்செல்வன், அவ்வாறான நடவடிக்கைகள் தேவையில்லை என்றார்.

கூட்டமைப்பைப் பதிவு செய்யப்படுவதை புலிகள் விரும்பவில்லை. அதனால்தான், அது பெயரளவிலான கூட்டமைப்பாக, தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்குள் சுருங்கும் நிலை ஏற்பட்டது. அந்த நிலையை, புலிகளின் காலத்துக்குப் பின்னர், தமிழரசுக் கட்சி கெட்டியாக பிடித்துக் கொண்டது.

கூட்டமைப்பு என்றால் வீட்டுச் சின்னம்; அதைத் தமிழரசுக் கட்சி என்றைக்கும் விட்டுக் கொடுக்காது. அதுபோல, சம்பந்தனின் காலத்துக்குப் பின்னரும் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை தமிழரசுக் கட்சி விட்டுக் கொடுக்காது.

கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னரான காலத்தில், கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டங்களுக்குள் நடைபெறும் வெட்டுக் குத்துகள், குளறுபடிகளைப் பார்த்தாலே, அது புரிந்துவிடும்.

அதுபோல, சம்பந்தன்கூட தன்னுடைய காலத்துக்குப் பின்னர், கூட்டமைப்பின் தலைமைத்துவம் தமிழரசுக் கட்சியிடம் இருக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருக்கின்றார். எந்தவொரு தருணத்திலும் அது, டெலோவிடமோ புளொட்டிடமோ செல்வதை அவர் விரும்பவில்லை.

ஏனெனில், தமிழரசுக் கட்சிக்கு ஜனநாயக அரசியலில் பெரும் பாரம்பரியம் இருப்பதாகவும் தமிழ் மக்களை வழிநடத்தும் தகைமை அதற்கே இருப்பதாகவும் சம்பந்தன் நம்புகிறார்; அல்லது, அந்த மேலாதிக்க நிலைப்பாட்டில் இருக்கிறார்.

அப்படியான கட்டத்தில், சம்பந்தன் உயிரோடு இருக்கும் போதே கூட்டமைப்பின் தலைமைத்துவத்தில் மாற்றங்களைச் செய்துவிடலாம் என்று நினைத்தால், அது பகற்கனவாக மாத்திரமே இருக்கும்.

## கடிதங்கள்

### வைத்தியசாலைக்கு செல்ல வழியேற்படுத்துங்கள்

கிளிநொச்சி, முக்கொம்பன் கிராம மக்கள், அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்குச் செல்லக் கூடிய வகையில், வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு பாதிக்கப்படும் மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளார்கள்.

கடந்த சில ஆண்டுகளுக்கு மேலாக, முக்கொம்பன் - கந்தபுரம் வீதி வழியான பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. முக்கொம்பனுக்கும் கந்தபுரத்துக்கும் இடையிலான மூன்று கிலோ மீற்றர் வரையான வீதி, குன்றும் குழியுமாக மாறியதன் காரணமாக, பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டது. இதன் காரணமாக முக்கொம்பன், நேரடம்பன், அரசபுரம், சின்னப்பல்லவராயன்கட்டு, கண்ணகைபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள், அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்குக் கூட செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

மேற்படி கிராமங்களில் இருந்து, அக்கராயன் மகா வித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்களும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். குறித்த வீதியைப் புனரமைக்குமாறு, முக்கொம்பன் கிராம மக்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மாவட்டச் செயலாளர், பூநகரி பிரதேச செயலாளர் ஆகியோருக்கு கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் கோரிக்கைகள் விடுத்தும் பயன்கள் ஏற்படவில்லை.

மக்களின் போக்குவரத்து நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மாவட்டச் செயலாளர் குறித்த வீதியைப் ப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வீதி புனரமைக்கப்பட்டால்தான் முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்துக்கு நடைபெற்ற இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவையும் நடைபெறும் எனவும் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

நடராசா கிருஸ்ணகுமார்




ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மிகவும் எளிமையான முறையில் நேற்று (03) ஆரம்பித்துவைக்கப்பட்டது. அவ்விழாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பாரியாரான முதல் பெண்மணி மைத்திரி விக்கிரமசிங்கவுடன் வருகைதந்தார். அவர்களுக்கு முன்பதாக பிரதமர் தினேஷ் குணவர்தனவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் வருகைதந்திருந்தனர்.
(படங்கள் : பிரதீப் தில்ருஷ்சன)



















இலங்கை வங்கியின் 83 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நுவரெலியா கிளையின் முகாமையாளர் எம். ராமன் தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன், விவசாய மற்றும் வீடமைப்பு கடன் உதவிகள் பயனாளிகள் சிலருக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத், நுவரெலியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் உடுகம சூரிய, நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரேமலால் மற்றும் நுவரெலியா இலங்கை வங்கி கிளையின் உத்தியோகத்தர்கள் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துக்கொண்டனர். ( பி.கேதீஸ் )










சென்னை


அ.தி.மு.க பொதுக்குழு வழக்கு

# இன்று விசாரணை

அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) பொதுக்குழுவை எதிர்த்து முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் வைரமுத்து ஆகியோர் தொடர்ந்த வழக்குகளை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி இன்று (04) விசாரிக்க உள்ளார்.

ஜூலை 11ம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க., பொதுக் குழுவுக்கு தடை விதிக்கக்கோரி தொடர்ந்த வழக்குகளை விசாரித்த நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி, உட்கட்சி விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது என்பதால், சட்டப்படி பொதுக்குழுவை நடத்திக்கொள்ளலாம், விதிகளை மீறினால் நீதிமன்றத்தை நாடலாம் என்று கூறி மனுக்களை தள்ளுபடி செய்து, பிரதான வழக்குகளை தள்ளி வைத்திருந்தார்.

இதையடுத்து ஜூலை 11ம் திகதி அ.தி.மு.க பொதுக்குழு நடத்தப்பட்டு இணை ஒருங்கிணைப்பாளராக இருந்த எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச் செயலாளராக தேர்தெடுக்கப்பட்டார்.





இந்த நிலையில், அதிமுக பொதுகுழுவுக்கு அனுமதி அளித்த உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவில் ஜூலை 11ம் திகதி நடந்த அ.தி.மு.க பொதுக்குழு கூட்டத்தில் கட்சியின் சட்ட விதிகள் அனைத்தும் மீறப்பட்டுள்ளதாகவும், ஒருங்கிணைப்பாளர் அனுமதி இல்லாமல் கூட்டம் நடத்த அதிகாரம் இல்லை என்பதால் பொதுக்குழு நடத்த அனுமதி வழங்கிய சென்னை உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி வழங்கிய உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும், பொதுக் குழு தீர்மானங்களை ரத்து செய்ய வேண்டும் என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், அ.தி. மு.க பொதுக்குழு விவகாரம் தொடர்பான வழக்கை உயர் நீதிமன்றமே விசாரிக்க வேண்டும் எனவும், விசாரணையை 2 வாரத்தில் விசாரித்து முடிக்க வேண்டுமெனவும் தனி நீதிபதிக்கு உத்தரவிட்டனர்.





காஷ்மீர்

# ஆக்சலுக்கு இறுதி அஞ்சலி

காஷ்மீரில் பயங்கரவாதிகளின் நடமாட்டத்தை கண்காணித்த கெமெரா அணிந்த ஆக்சல் என்ற இராணுவ நாயை பயங்கரவாதிகள் சுட்டுக்கொன்றனர். இதில் ஆக்சலுக்கு இராணுவ வீரர்கள் மலர் வளையம் வைத்து இறுதி மரியாதையை செலுத்தினர்.

ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகளுக்கும், இந்திய இராணுவத்திற்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் இந்திய இராணுவத்தின் மோப்ப நாய் ஆக்சலை பயங்கரவாதிகள் சுட்டதால் உயிரிழந்தது.

ஜம்மு - காஷ்மீரில் பாகிஸ்தான் நாட்டு பயங்கரவாதிகள் 3 பேர் இருப்பதாக இந்திய இராணுவத்திற்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் இந்திய ராணுவத்தினர் பாரமுல்லா மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தியா

# மூவேளையும் சட்னி சாப்பிட முடியுமா?

திரிணமுல் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ககோலி கோஷ் தஸ்திதார், அவையில் கத்தரிக்காயை கடித்துக் காண்பித்து, எரிவாயு சிலிண்டரின் விலை உயர்வால் மக்கள் காய்கறிகளை பச்சையாக உண்ணும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தி விலைவாசி உயர்வு தொடர்பாக உரையாற்றிய திராவிட முன்னேற்ற கழக (தி.மு.க) பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி, சாமானியர்கள் குழந்தைகளுக்கு உணவு அளிக்க திண்டாடும் நிலை உள்ளதாகவும், 3 வேளையும் சட்னி அரைத்து சாப்பிட முடியுமா என்றும் கேள்வி எழுப்பினார்.

விலைவாசி உயர்வு தொடர்பாக அவையில் விவாதிக்க அனுமதி வழங்கப்பட்ட போதே கனிமொழி எம். பி மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார். விலைவாசி உயர்வு காரணமாக ஏழை மக்களின் அன்றாட வாழ்க்கை போராட்டமாக மாறியுள்ளது. பெட்ரோல், டீசல், சிலிண்டர் விலை



**“ சமையல் எண்ணெய் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. சமையல் எரிவாயு சிலிண்டர் மானியம் நிறுத்தப்பட்டுள்ளது’ என அடுக்கடுக்கான விமர்சனங்களை முன்வைத்தார்**

தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தற்போது சுமார் 15 ஆயிரம் ரூபாய் பெட்ரோல், டீசலுக்கு மட்டும் செலவழிக்க வேண்டியுள்ளது என்றார்.

அத்தியாவசிய பொருட்கள், உணவு பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது. சமையல் எண்ணெய் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. சமையல் எரிவாயு சிலிண்டர் மானியம் நிறுத்தப்பட்டுள்ளது’ என அடுக்கடுக்கான விமர்சனங்களை முன்வைத்தார்.

உத்தரபிரதேசம்

# பென்சில், விலையை உயர்த்திவிட்டீர்கள்

## பிரதமருக்கு சிறுமி கடிதம்

விலைவாசி உயர்வு தொடர்பாக உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த 1 ஆம் வகுப்பு சிறுமி ஒருவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

உத்தரப் பிரதேசம் மாநிலம், கன்னோஜ் மாவட்டத்தில் உள்ள சிப்ரமாவ் நகரைச் சேர்ந்த கிருத்தி துபே என்ற சிறுமி ஒன்றாம் வகுப்பு பயின்று வருகிறார். இவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், என் பெயர் கிர்த்தி துபே, நான் 1ம் வகுப்பு படிக்கிறேன். நீங்கள் விலைவாசியை வெகுவாக உயர்த்திவிட்டீர்கள். எனது பென்சில் மற்றும் ரப்பர் (அழிப்பான்) விலை உயர்ந்துவிட்டது. பென்சில் கேட்டால் அம்மா அடிப்பார். நான் என்ன செய்ய வேண்டும்? மற்ற மாணவர்கள் என் பென்சிலை திருடுகிறார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து சிப்ரமாவ் மாவட்டத்தின் சப் டிவிஷனல்



**“ பென்சில் கேட்டால் அம்மா அடிப்பார். நான் என்ன செய்ய வேண்டும்? மற்ற மாணவர்கள் என் பென்சிலை திருடுகிறார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.**

மாஜிஸ்திரேட் அசோக் குமார் செய்தியாளர்களிடம் கூறுகையில், ‘ சிறுமியின் கடிதம் சமூக வலைதளங்கள் மூலம்தான் அறிந்தேன். குழந்தைக்கு எந்த வகையிலும் உதவ நான் தயாராக இருக்கிறேன் என்றார்.

புளியங்குடி



# பெரியார் சிலை நிர்வாகி கைது

பெரியார் சிலையை உடைக்க வேண்டும் என அவதூறு வீடியோ வெளியிட்ட தென்காசி மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார்.

பா.ஜ.க.,வை சேர்ந்த தென்காசி மாவட்ட விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு தலைவர் கிருஷ்ணன்(33) என்பவர் இருபிரிவினர் இடையே பிரச்சினையை தூண்டும் விதமாக அவதூறு வீடியோ ஒன்றை வெளியிட்டு சர்ச்சையை ஏற்படுத்தினார்.

இதுதொடர்பான வீடியோவில் பெரியார் சிலைகளை அடித்து உடையுங்கள், சாணியை அபிஷேகம் செய்யுங்கள், செருப்பு மாலை அணியுங்கள் என்று சர்ச்சைக்குறிய வகையில் பேசியிருந்தார். அந்த வீடியோ வைரலானதை தொடர்ந்து, புளியங்குடியை சேர்ந்த திராவிட முன்னேற்ற கழகத்தினர் (தி.மு.க) பொலிஸில் முறைப்பாடு செய்தனர். இதைத்தொடர்ந்து, புளியங்குடி பொலிஸார் கிருஷ்ணனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தோனேஷியா



# 117 எலும்புக்கூடுகள் ஒரே நேரத்தில் தகனம்

இந்தோனேஷியாவில் உள்ள பாலித்தீவில் படங்பாய் கிராமம் அமைந்துள்ளது. இக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் ஒரு வினோதமான சடங்கை செய்து வருகின்றனர். அதாவது அக்கிராமத்தில் ஒருவர் இறந்து விட்டால் முதலில் அவர்களின் உடல்களை சவப்பெட்டியில் வைத்து புதைத்து விடுவார்கள்.

அதன் பின் சிறிது காலத்திற்கு பிறகு புதைக்கப்பட்ட சவப்பெட்டியை வெளியில் எடுத்து அதில் உள்ள எலும்புக்கூடுகளை ஒரு பெட்டியில் அடைத்து வைப்பார்கள். அதன் பிறகு சடங்குகளுக்கு ஏற்பாடு செய்து, 20 அடி உயரத்தில் இருக்கும் எருது வடிவிலான தேரில் பொதுமக்கள் தாங்கள் வைத்திருக்கும் எலும்பு கூடுகளுடன் இறந்தவர்களின் புகைப்படத்தையும் எடுத்துச் சென்று அஞ்சலி செலுத்துவார்கள்.

இதனையடுத்து தங்கள் கையில் வைத்திருக்கும் எலும்புக்கூடுகள் அடங்கிய பெட்டியை எருது வடிவில் இருக்கும் பொம்மையில் வைத்து விடுவார்கள்.

அந்த வகையில் அண்மையில் சுமார் 117 பேரின் எலும்புக்கூடுகள் எருது பொம்மைக்குள் வைக்கப்பட்டு தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளதுடன் பொம்மை முழுமையாக எரிந்து முடிந்த பின்னர் அச் சாம்பலை எடுத்து மக்கள் கடற்கரையில் கரைத்துள்ளனர்.

இப்படி செய்வதால் இறந்தவர்களின் ஆன்மாக்கள் சாந்தி அடைந்து புது வாழ்வை தொடங்குவதாக கிராம மக்கள் நம்புகின்றனர்.

இந்த சடங்கை தனியாக செய்வதால் அதிக செலவாகும் என்பதால் மக்கள் நிறைய சடலங்களின் எலும்புக்கூடுகளை ஒன்றாக வைத்து சடங்கு செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



கனடா

## முதலாளியின் வீட்டை இடித்த ஊழியர்

ஊழியர் ஒருவர் தனது முதலாளியின் வீட்டை கிரேன் வைத்து இடித்த சம்பவம் கனடாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் ஒன்டாரியோ பகுதியைச் சேர்ந்த 59 வயதான நபர் ஒருவரே தான் பணிபுரிந்து வந்த நிறுவனத்தில் இருந்து தன்னை பணி நீக்கம் செய்ததால் ஆத்திரமடைந்து, தனது முதலாளிக்குச் சொந்தமான வீட்டை கிரேன் கொண்டு இடித்துள்ளார்.

இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் இதனை வீடியோவாக எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட ஆரம்பித்தால் குறித்த சம்பவம் வைரலானது.

இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் குறித்த ஊழியரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவருக்கு சுமார் 5000 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டு, மீண்டும் ஆஜராகும் படியும் நீதிமன்றத்தில் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அந்நிறுவனத்தின் முதலாளி கருத்துத் தெரிவிக்கையில் ”அதிர்ஷ்டவசமாக வீட்டில் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும், இந்த சேதங்களை சரி செய்ய பல மில்லியன் டொலர்கள் செலவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



பிரித்தானியா

## தங்க விநாயகர்

இந்துக்களால் இம்மாதம் 31ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படவுள்ளது. இதையொட்டி, பிரித்தானியாவில் உள்ள நிறுவனமொன்று , விநாயகர் உருவம் பொறித்த 24 கரட் தங்க கட்டியை வெளியிட்டுள்ளது.

**இந்த தங்க கட்டி இணையதளத்தில் விற்பனைக்கு வரவுள்ள நிலையில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதன் எடை 20 கிராம் உள்ளது எனவும் இதன் விலை 1,110.80 பவுண்டு (இலங்கை மதிப்பில் சுமார் 5 லட்சம் ரூபாய் ) என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த தங்க கட்டி இணையதளத்தில் விற்பனைக்கு வரவுள்ள நிலையில் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

### இராணுவ ஹெலிகொப்டர் விபத்து;

## 6 பேர் உயிரிழப்பு


பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியில் ஈடுபட்ட ஹெலிகொட்டர் ஒன்று விபத்துக்குள்ளானதில் 6 இராணுவர் வீரர்கள் உயிரிழந்துள்ளனர எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த சில வாரங்களாகப் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பலூசிஸ்தான் மாகாணம் மிகக் கடுமையாகக் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் பணியிலும் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் பலூசிஸ்தான் மாகாணத்தின் தலைநகர் குவெட்டாவில் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தான் இராணுவத்துக்கு சொந்தமான ஹெலிகாப்டர் கடந்த 1 ஆம் திகதி இரவு குவெட்டாவில் இருந்து கராச்சி நகருக்கு புறப்பட்டு சென்றது.

குறித்த ஹெலிகொப்டரில் மூத்த இராணுவ அதிகாரி உட்பட 6 இராணுவ வீரர்கள் இருந்தனர். இந்நிலையில் குறித்த ஹெலிகொப்டரானது



மோசமான வானிலையால் புறப்பட்ட சில நேரத்திலேயே லாஸ்பேலா மாவட்டத்தில் உள்ள மலைப்பாங்கான பகுதிக்கு மேலே பயணிக்கும் போது கீழேவிழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மூன்றாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

## மேற்கிந்தியத் தீவுகளை வென்ற இந்தியா



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்றாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியை இந்தியா வென்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், சென். கிட்ஸில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் றோஹித் ஷர்மா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், கைல் மேயர்ஸின் 73 (50), றொவ்மன் பவலின் 23 (14), ஷிம்ரோன் ஹெட்மயரின் 20 (12) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஹர்டிக் பாண்டியா 4-0-19-1, புவ்னேஷ்வர் குமார் 4-0-35-2, அர்ஷ்டீப் சிங்க் 4-0-33-1, இரவிச்சந்திரன் அஷ்வின் 4-0-26-0, தீபக் ஹூடா 1-0-1-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 165 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, சூரியகுமார் யாதவ்வின் 76 (44), றிஷப் பண்டின் ஆட்டமிழக்காத 33 (26) ஓட்டங்களோடு 19 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், அகீல் ஹொஸைன் 4-0-28-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக சூரியகுமார் யாதவ் தெரிவானார்.

### துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில்

## இரண்டாமிடத்துக்கு முன்னேறிய சூரியகுமார் யாதவ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு இந்தியாவின் சூரியகுமார் யாதவ் முன்னேறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்றாவது போட்டியில் 76 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே நான்காமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை சூரியகுமார் யாதவ் அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. பாபர் அஸாம், 2. சூரியகுமார் யாதவ், 3. மொஹமட் றிஸ்வான், 4. ஏய்டன் மார்க்ரம், 5. டேவிட் மலான், 6. ஆரோன் பின்ஞ், 7. டெவோன் கொன்வே, 8. பதும் நிஸங்க, 9. நிக்கலஸ் பூரான், 10. மார்டின் கப்தில்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. ஜொஷ் ஹேசில்வூட், 2. தப்ரையாஸ் ஷம்சி, 3. ரஷீட் கான், 4. அடில் ரஷீட், 5. அடம் ஸாம்பா, 6. அகீல் ஹொஸைன், 7. வனிடு ஹஸரங்க, 8. புவ்னேஷ்வர் குமார், 9. அன்றிச் நொர்ட்ஜே, 10. மகேஷ் தீக்ஷன.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. மொஹமட் நபி, 2. ஷகிப் அல் ஹஸன், 3. மொயின் அலி, 4. கிளென் மக்ஸ்வெல், 5. றொஹான் முஸ்தபா.




### பங்களாதேஷுக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய சிம்பாப்வே

பங்களாதேஷுக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை சிம்பாப்வே கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதல் போட்டியை சிம்பாப்வேயும், இரண்டாவது போட்டியை பங்களாதேஷும் வென்ற நிலையில் ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்து 2-1 என தொடரை சிம்பாப்வே கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

சிம்பாப்வே: 156/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றயான் பேர்ள் 54 (28), லுக் ஜொங்வி 35 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: மஹெடி ஹஸன் 2/28 [4], ஹஸன் மஹ்மூட் 2/28 [4], மகமதுல்லா 1/8 [2], முஸ்தபிசூர் றஹ்மான் 1/22 [4], மொஷாடெக் ஹொஸைன் 1/22 [4])

**பங்களாதேஷ்: 146/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஃபிஃப் ஹொஸைன் ஆ.இ 39 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: விக்டர் நயுச்சி 3/29 [4], பிராட் இவான்ஸ் 2/26 [4], வெஸ்லி மட்ஹெவெரே 1/14 [2], ஷோன் வில்லியம்ஸ் 1/16 [2], ஜோன் மஸாரா 0/5 [1])**

பங்களாதேஷ்: 146/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஃபிஃப் ஹொஸைன் ஆ.இ 39 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: விக்டர் நயுச்சி 3/29 [4], பிராட் இவான்ஸ் 2/26 [4], வெஸ்லி மட்ஹெவெரே 1/14 [2], ஷோன் வில்லியம்ஸ் 1/16 [2], ஜோன் மஸாரா 0/5 [1])

போட்டியின் நாயகன்: றயான் பேர்ள்

தொடரின் நாயகன்: சிகண்டர் ராசா



## பிக் பாஷில் ஜயசூரிய, சந்திமால்?

அவுஸ்திரேலியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான பிக் பாஷின் எதிர்வரும் பருவகாலத்துக்கான வீரர்கள் தெரிவுப் பட்டியலில் இலங்கையின் பிரபாத் ஜெயசூரிய, தினேஷ் சந்திமால், மகேஷ் தீக்ஷன, பானுக ராஜபக்ஷ, லக்ஷன் சந்தகான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

### பேர்மிங்ஹாம் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் 2022:

## தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தும் அவுஸ்திரேலியா

பேர்மிங்ஜாம் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் 2022-இன் பதக்கப் பட்டியலில் தொடர்ந்தும் அவுஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்துகிறது.

நேற்று மாலை 5 மணி வரையில் 42 தங்கப் பதக்கங்கள், 32 வெள்ளிப் பதக்கங்கள், 32 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 106 பதக்கங்களுடன் தொடர்ந்தும் பதக்கப் பட்டியலில் அவுஸ்திரேலியா முதலாமிடத்தில் காணப்படுகின்றது.

31 தங்கப் பதக்கங்கள், 34 வெள்ளிப் பதக்கங்கள், 21 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 86 வெண்கலப் பதக்கங்களுடன் போட்டியை நடாத்தும் நாடான இங்கிலாந்து இரண்டாமிடத்தில் காணப்படுகின்றது. 13 தங்கப் பதக்கங்கள், ஏழு வெள்ளிப் பதக்கங்கள், ஆறு வெண்கலப் பதக்கமென மொத்தமாக 26 பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் நியூசிலாந்து காணப்படுகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 03 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.